நாள்:31.07.2023

STC 1799/2017

புசா.1

பெயர் :சிவகுமார்

த/பெ.துரைசாமி

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. எதிரியின் பதில் அறிவிப்பை வழக்கு தொடுத்த பின்னிட்டு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் பதில் அறிவிப்பை கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டையில் கையொப்பமிட்டுதான் எதிரியின் பதில் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த அஞ்சல் ஒப்புகை அட்டை **எசாஆ 1** ஆகும்.

2. எனக்கு தமிழ் படிக்க தெரியும். எசாஆ 1 ல் கையொப்பத்திற்கு கீழ் 17.05 என்று தேதி காணப்படுகிறது என்றால் சரிதான். 19.05.2017 அன்று புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே தேதியில்தான் எதிரியின் பதில் அறிவிப்பை நான் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தேதிக்கு இரண்டு மாதங்கள் கழித்து நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்படி sworn statement கொடுத்த சமயத்தில் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் எதிரி எவ்வித பதில் அறிவிப்பும் தரவில்லை என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எதிரி பதில் அறிவிப்பு தரவில்லை என்று முதலில் சாட்சியமளித்துவிட்டு தற்போது எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியதாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி இவ்வழக்கில் சாட்சியமளித்த பிறகு எனது வழக்கு பலவீனமடைந்ததால் தற்போது மேற்படி பதில் அறிவிப்பை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிய்லல.

(புகார்தாரர் தரப்பில் மறு விசாரணைக்கு அனுமதி கோரி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்து அனுமதி வழங்கப்பட்டது)

புகார்தாரர் தரப்பில் மறுவிசாரணை:

1. 19.05.2017 அன்று மதியம்தான் எதிரியின் பதில் அறிவிப்பு எனக்கு கிடைக்கப்பெற்றது. எசாஆ 1 ல் அஞ்சலக முத்திரை 20.05.2017 என்று

காணப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் மறு குறுக்கு விசாரணை</u>:

1. எசாஆ 1ல் காணப்படும் அஞ்சல முத்திரையில் 20.05.2017 என்று உள்ளது எதிரியின் வழக்கறிஞரால் பெற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். நான் 19.05.2017 அன்று எதிரியின் பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டேன். புகார் தாக்கல் செய்து 2 மாதங்கள் கழித்து நான் அளித்துள்ள நீதிமன்ற சாட்சியத்தில் எதிரி பதில் அறிவிப்பு எதுவும் தரவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. எதிர் வழக்கறிஞர் என்னை குறுக்கு விசாரணை செய்த சமயத்தில் எதிரி பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றுதான் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். முதலில் எதிரி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சாட்சியமளித்த பிறகு தற்போது அதற்கு முரணாக எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று கூறுவது நான் பொய் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்பதை குறிக்கிறது என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.